RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 103 ஏப்ரல்.20 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# "அதிமுக ஆட்சி அமைந்ததும் நாமக்கல் 'கிட்னி' திருட்டு குறித்து விசாரணை, நடவடிக்கை உறுதி" : இபிஎஸ்

திருச்செங்கோடு: ஏப்.20-

அதிமுக ஆட்சி அமைந்ததும், கிட்னி திருட்டு விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுப்பது உறுது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம் (தனி), திருச்செங்கோடு, குமாரபாளையம், பரமத்தி வேலூர் ஆகிய 5 தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்கள் பி.எஸ்.மோகன், சி.சந்திரசேகரன், சந்திரசேகர், பி.தங்கமணி, சேகர் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ராசிபுரத்தில் அதிமுக கூட்டணியில் பாஜக வேட்பாளர் டி.துரைசாமி போட்டியிடுகிறார்.

இவர்களை ஆதரித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திருச்செங்கோட்டில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், "நாமக்கல் மாவட்டம் அதிமுகவின் கோட்டை. எனக்கு எம்பி என்று அடையாளம் கொடுத்த மாவட்டம் நாமக்கல் மாவட்டம். அதிமுக ஆட்சியில் அதிகமான திட்டங்களை பெற்ற ஒரே மாவட்டம் நாமக்கல் மாவட்டம்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு கெட்டு விட்டது. எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் விற்பனை நடக்கிறது. திமுகவினர் கஞ்சா விற்பனை செய்யும் நபர்களுக்கு துணை நிற்கின்றனர். அதனால் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கஞ்சா போதைக்கு அடிமையானவர்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் சீண்டல் உள்ளவற்றில் ஈடுபடுகின்றனர்.

திமுக ஆட்சிக்கு வந்த




பிறகு 24 ஆயிரம் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். இதில் 18 ஆயிரம் பேர் சிறுமிகள். இதில் 6,900 பேருக்கு 84 கோடி ரூபாய் நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. நிவாரணம் கொடுத்தால் சரியாக போய்விடுமா? பாலியல் பாதிப்பிற்கு ஆளான சிறுமிகளின் வாழ்க்கை என்னாவது. "அப்பா, அப்பா என்றால் எனது செவிக்கு மகிழ்ச்சியாக உள்ளது," என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார்.

பாலியல் சீண்டலுக்கு உள்ளாகும் போது சிறுமிகளின் சத்தம் அந்த அப்பாவுக்கு கேட்கவில்லையா? திமுக ஆட்சியில் சிறுமிகள், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. வயதான பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட மோசமான கேவலமான ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டுள்ளது.

போதை ஆசாமிகளின் செயலால் தமிழகம் தலை குனிந்து விட்டது. திருச்செங்கோடு தொகுதியில் கஞ்சா போதை மாத்திரை விற்பனை ஆகிறது. தேவனாங்குறிச்சியில் திமுக நிர்வாகி போலீஸ் மதுபான தொழிற்சாலை நடத்தினார்.

தமிழகத்தில் வறுமை என்ற நிலையே இல்லை என முதல்வர் ஸ்டாலின் பேசுகிறார். அப்படி வறுமை இல்லை என்றால் எதற்காக கிட்னி விற்பனை செய்கின்றனர். வறுமையை பயன்படுத்தி ஆளுங்கட்சியை சேர்ந்த எம்எல்ஏ ஒருவரின் மருத்துவமனையில் கிட்னியை கொள்ளையடிக்கின்றனர். இந்த கொள்கைக்காக அமைக்கப்பட்ட குழு அந்த மருத்துவமனையில் சோதனை நடத்தி கிட்னி விற்பனை செய்யப்பட்டது உண்மை என அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்

இந்த திருட்டில் புரோக்கர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதிமுக ஆட்சி அமைந்ததும் சட்டப்படி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும். திமுகவினர் நடத்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இருந்தால் போய் ஸ்கேன் செய்து பார்த்து கொள்ளவும்.

ஏனெனில் உறுப்புகள் காணாமல் போயிருக்கும். இந்த ஆட்சி கொடுமையான ஆட்சி. அதிமுக ஆட்சி அமைந்துடன் விசைத்தறி, கைத்தறிகளுக்கு கூடுதலாக இலவச மின்சாரம் வழங்கப்படும். நாடாளுமன்றத்தில் தொகுதி மறு வரையறை மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டாம் என முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

தொகுதி மறுவரையறை வந்தால் நமக்கு எம்பி எண்ணிக்கை குறைந்துவிடும் எனவும் முதல்வர் ஸ்டாலின் பேசினார். ஆனால் நாடாளுமன்றத்தில் பேசிய அமித் ஷா தமிழகத்தின் எம்பி தொகுதிகள் எந்த விதத்திலும் பாதிக்காது. 59 தொகுதிகளாக அதிகரிக்கும் என்றார். அப்போது நமக்கு மத்திய அரசு சதகமாக உள்ளது என்று தானே அர்த்தகம்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தோற்கடிக்கப்பட்டதால் நாட்டு மக்களின், பெண்களின் கனவு தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ், திமுகவுக்கு தேர்தலில் சரியான பாடத்தை புகட்ட வேண்டும் என்றார்.

## தமிழகத்தில் தே.ஜ. கூட்டணிக்கு ஆதரவாக ஏப்.20, 21ல் சந்திரபாபு நாயுடு பிரச்சாரம்

சென்னை, ஏப்.20-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து, ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20 மற்றும் 21 தேதிகளில் தமிழகம் முழுவதும் இரண்டு நாள் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக, அதிமுக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக்கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து ஆந்திர முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 20, 21ஆம் தேதிகளில் தமிழகத்தில் பிரச்சாரம் செய்கிறார்.

ஏப்ரல் 20ல் கோவை



நகரில் நடைபெறும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு உரையாற்றவுள்ளார். அதன்பின்னர், ஓசூர் மற்றும் தளி ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து, அங்கு நடைபெறும் மற்றொரு பொதுக்கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார். மாலையில் சென்னை வந்தடையும் அவர், ஆவடி பகுதியில் நடைபெறும் பிரம்மாண்டமான ரோடு ஷோவில் பங்கேற்கிறார்.

ஏப்ரல் 21 அன்று மதுரை செல்லும் சந்திரபாபு நாயுடு, அங்கிருந்து சாத்தூர் சென்று சமூகத் தலைவர்களைச் சந்திப்பதுடன், பிரச்சார நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார். அன்று மாலையில் அவரின் இப்பிரச்சாரப் பயணம் நிறைவடைகிறது.

## "விஜய் ஆதரவாளர்கள் வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்த வேண்டும்; அப்போதுதான்..." அன்புமணி

கடலூர்: ஏப்.20-

"விஜய் ஆதரவாளர்கள் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்துங்கள். அப்போதுதான் திமுக ஆட்சி அகற்றப்படும்" என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தொகுதி மறுவரையறையை மக்கள் தொகை அடிப்படையில் கொண்டுவருவதாக மத்திய அரசு சொல்லவே இல்லை. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பை தொகுதிகள் எண்ணிக்கைக்காக பயன்படுத்தவில்லை, மகளிர் இட ஒதுக்கீட்டை எப்படி கொண்டுவருவது, எந்த தொகுதிகளில் பெண்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளது என்ற விஷயங்களுக்காகவே கணக்கில் எடுத்துள்ளனர். ஆனால் இவற்றைப் பற்றி கவலைப்படாமல் திமுக மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை எதிர்த்துள்ளது.



ஒட்டுமொத்தமாக தமிழக பெண்கள் திமுகவை வீழ்த்தப் போகிறார்கள் என்பதே உண்மை.

முதல்வர் ஸ்டாலின் முதலில் தனது 5 ஆண்டு கால திட்டங்களை சொல்லி வாக்கு கேட்டார், அது மக்களிடம் எடுபடவில்லை. அதனால், இப்போது என்னையும், இபிஎஸ்சையும் பற்றி தனிநபர் அவதூறு பரப்புகிறார். தனது 5 ஆண்டுகால அரசில் செய்த சாதனைகள் மீது நம்பிக்கை இல்லாததால், ரூ.8 ஆயிரம் டோக்கனை நம்புகிறார் ஸ்டாலின்.

விஜயகாந்த் கட்சி தொடங்கியதே திமுகவை வீழ்த்தவும், திமுக அரசை வீழ்த்தவும் தான். இப்போது பிரேமலதா திமுக அணியில் சேர்ந்துவிட்டார். ஆனாலும் அவர் அங்கிருந்து கொண்டே எங்களுக்கு தான் வேலை செய்கிறார். முதல்வரை வைத்துக் கொண்டே எங்கும் பாலியல் வன்கொடுமை நடக்கிறது, போதைப்பொருள் விற்கிறார்கள் என்று பிரேமலதா பேசுகிறார்.

விஜய் கட்சி தொடங்கிய காரணமே திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்றுதான். எங்கள் நோக்கமும் திமுக ஆட்சியை அகற்றுவதுதான். விஜய் இந்த தேர்தலில் ஓரளவு வாக்குகள் பெறுவார். ஆனால் வெற்றிபெற முடியாது.

எனக்கு 2016ல் இதுபோலவே நல்ல ஆதரவு இருந்தது. ஆனால், கடைசியில் மக்கள் அதிமுகவுக்கு வாக்குகள் செலுத்தினர். அதே சூழல்தான் இப்போதும் உள்ளது. விஜய் ரசிகர்கள் எப்படியும் விஜய்க்கே வாக்களிப்பார்கள். ஆனால், விஜய் ஆதரவாளர்கள் அவர்களது வாக்குகளை வீணடிக்காமல் அதிமுக கூட்டணிக்கு செலுத்துங்கள். அப்போதுதான் திமுக ஆட்சி அகற்றப்படும். உங்கள் வாக்குகளை வீணடிக்காதீர்கள்" என்று கூறினார்.



## அரிய நோய் பாதித்த சிறுமியின் மருந்துக்கு ஆந்திர அமைச்சர் லோகேஷ் ரூ.6 கோடி நிதியுதவி

சென்னை, ஏப்.20-

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம், பெல்துர்த்தியை சேர்ந்த சுரேஷ் புஷ்பலதா தம்பதிக்கு கடந்த ஆண்டு ஏப்.12ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பிறந்தது முதலே 'ஸ்பைனல் மஸ்குலர் அட்ராபி' (எஸ்எம்பி) எனும் அரிய வகை நோய் இருந்தது.

மேலும் நோய்க்குச் சிகிச்சை அளிக்க தேவைப்படும் ஒரு ஊசியின் மதிப்பு ரூ.16 கோடி எனவும் அந்த மருந்துவெளிநாட்டில் இருந்து வரவழைக்க வேண்டும் என்றும்மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக குழந்தை புனர்விகாயின் பெற்றோர் சமூக வலைதளங்கள் மூலம் உதவி கோரினர். இதில் கடந்த ஓராண்டில் ரூ.10 கோடி மட்டுமே வசூலானது.

இதுகுறித்து தகவல் அறிந்த ஆந்திர கல்வித் துறை அமைச்சர் நாரா லோகேஷ், ஹைதராபாத்தில் அக்குழந்தை கிசிச்சை பெறும் மருத்துவமனைக்கு சென்றார். குழந்தையின் பெற்றோரை நலம் விசாரித்த அவர், மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார்.

பிறகு ரூ.6 கோடியை தானே வழங்குவதாக உறுதி அளித்தார். இதையடுத்து வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ஊசி மருந்தை நேற்று அவர் நேரில் வழங்கினார். அந்த ஊசி புனர்விகா க்கு செலுத்தப்பட்டது. அப்போதுகுழந்தையின் பெற்றோர் அவருக்கு நன்றி தெரிவித்தனர். பிறகு 'எக்ஸ்' தளத்தில் "குழந்தை புனர்விகா நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும்" என அமைச்சர் லோகேஷ் பதிவிட்டுள்ளார்.

## "பெண்கள் அதிகம் அரசியலுக்கு வருவதில் திமுக, காங்கிரஸுக்கு அச்சம்" மத்திய அமைச்சர் மாண்டவியா

மதுரை: ஏப்.20-

"எம்பி தொகுதிகள் அதிகரித்து பெண்கள் அதிகளவில் அரசியலுக்கு வந்தால் தங்களின் வம்சாவளி ஆதிக்கம் பலவீனமடையும்," என திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அஞ்சுகிறது என மத்திய அமைச்சர் மான்சுக் மாண்டவியா குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: "நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை நிராகரித்ததில் இருந்து காங்கிரஸ் மற்றும் திமுகவின் உண்மையான மனநிலை அம்பலமாகியுள்ளது. இருக் கட்சிகளும் அரசியலில் பெண்களுக்கு உரிய இடம் கிடைப்பதை விரும்பவில்லை என்பதையும் தெளிவாக காட்டுகிறது.

திமுகவும் காங்கிரஸும் ஒரு சில குடும்பங்களுக்கும் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அரசியல் வட்டங்களுக்கும் அப்பால் அதிகாரம் செல்வதையும் விரும்பவில்லை என்று தெரிகிறது. காங்கிரஸும், திமுகவும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை பல ஆண்டுகளாக நிலுவையில் வைத்திருந்தன. முடிவெடுக்கும் நேரம் வரும் போதெல்லாம், சாக்குப் போக்குகள் கூறி அதைத் தடுத்து வந்தன.

இப்போது பிரதமர் மோடி பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை கொண்டு வந்த நிலையில் மீண்டும் தடுத்து நிறுத்தியுள்ளனர். பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்பது அவர்கள் கூறுவது வெறும் அரசியல் முழக்கம் மட்டுமே. தொகுதி மறுவரையறை தொடர்பாக காங்கிரஸ் மற்றும் திமுகவால் தவறான தகவல்கள் பரப்பப் படுகின்றன. வேண்டும் என்றே தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மக்களைத் தவறாக வழிநடத்து கின்றனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கால முறை தொகுதி மறுவரையறைக்கு வழிவகை செய்கிறது. இந்த முறையால் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் உட்பட பல்வேறு பிரிவினருக்கான இடங்கள் அதிகரிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் மூன்று மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டிருந்தால் மொத்த எம்பிக்களின் பலம் 850 ஆக அதிகரித்திருக்கும். தனி தொகுதிகளின் எண்ணிக்கை 131 ல் இருந்து ஏறத்தாழ 205 ஆக உயர்ந்திருக்கும். தென்னிந்திய மாநிலங்களில் பிரதிநிதித்துவம் பெருமளவில் அதிகரித்திருக்கும்.

தமிழ்நாட்டின் தொகுதிகள் 39ல் இருந்து 59 ஆக அதிகரிக்கும். ஐந்து தென் மாநிலங்களில் தற்போதுள்ள 129 எம்பி தொகுதிகள் மறுவரையறைக்குப் பிறகு 195 தொகுதிகளாக அதிகரித்திருக்கும். இந்த வாய்ப்பை காங்கிரஸும் திமுகவும் தடுத்துவிட்டது.

இதனால் 2026 மக்கள் தொகைக் கணக்கெடுப் பிற்குப் பிறகு தொகுதித மறுவரையறை மேற்கொள்ளும் போது தமிழ்நாட்டிற்கு 29 தொகுதிகள் மட்டுமே கிடைக்கும். திமுகவும் காங்கிரஸின் செயலால் தமிழ்நாட்டுக்கும் தென்னிந்தியாவுக்கும் பிரதிநிதித்துவம் குறையும் நிலை எழுந்துள்ளது. தங்கள் அரசியல் தோல்விகளை மூடிமறைக்க தவறான தகவல்களைப் பயன்படுத்துகிறார்கள்.

தொகுதிகள் அதிகரித்து, அதிகளவில் பெண்கள் அரசியலில் நுழைந்தால் தங்களின் வம்சாவளி ஆதிக்கம் பலவீனமடையும் என திமுகவும், காங்கிரஸும் அஞ்சுகிறது. சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மகள்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து தங்களின் ஏக போகத்திற்கு சவால் விடுவார்கள் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். மேடையில் அதிகாரமளித்தல் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நாடாளுமன்றத்திற்குள் அதை எதிர்க்கிறார்கள். அவர்களின் பாசாங்குத் தனம் இப்போது தேசத்தின் முன் முழுமையாக அம்பலமாகியுள்ளது.

இருப்பினும் போராட்டம் இத்துடன் நிற்காது. இந்தியப் பெண்கள் முன்னேறிச் செல்வார்கள். அவர்களை எந்த அரசியல் தடையும் தடுக்க முடியாது. பெண்கள் இடஒதுக்கீட்டை தடுக்க முயன்றவர்களுக்கு, இந்த நாட்டுப் பெண்கள் ஒரு வலுவான, ஜனநாயகப் பதிலடியைக் கொடுப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பல்லாவரம் தொகுதி தமிழகத்தில் முன்மாதிரி தொகுதியாக மாற இரட்டை இலைக்கு வாக்களியுங்கள்

## ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து பேச்சு



தாம்பரம் ஏப். 20-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஐ ஜே கே வேட்பாளர் வழக்கறிஞர் வி வெங்கடேசனை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து ஜமீன் பல்லாவரம் பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அவருக்கு அதிமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் கிரேன் மூலம் 12 அடி உயரம் கொண்ட பிரமாண்ட மாலை அணிவித்தும் வீரவால் வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தனர் தேசிய ஜனநாயக கூட்டணி சிறப்பான கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாஜக தமிழகத்திற்காக எவ்வளவு திட்டங்களை கொடுத்துள்ளது வந்தே பர்த் ரயில் தமிழகத்திற்க்கு விடப்பட்டுள்ளது மத்திய அரசின் வீடு கட்டும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது மோடி அவர்களின் சிறப்பான ஆட்சியில் உலக அளவில் போர் சூழல் நிலவும் நிலையில் இந்தியாவில் பெட்ரோல் டீசல் விலை உயராமல் பார்த்து கொண்டுள்ளார் பிரதமர் மோடி அதுபோல் எடப்பாடி யார் ஆட்சியில் பல நல்ல திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டது எடப்பாடி பழனிசாமி அவர்கள் அதிர்ஷ்டமான தலைவர் ஏனென்றால் அவர் ஆட்சியில் மக்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை கொரோனா காலத்திலும் பல திட்டங்களை மக்களுக்காக கொடுத்தவர் அதுபோல் அன்புமணி மத்திய அமைச்சராக இருந்த போது தான் 108 சேவை கொண்டுவரப்பட்டது இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் கல்வி கொடுத்தார் இப்பேற்பட்ட நல்ல தலைவர்களின் கூட்டணி தான் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் வி வெங்கடேசனை வெற்றி பெற செய்தால் பல்லாவரம் தொகுதி தமிழ்நாட்டிலேயே முன்மாதிரி தொகுதியாக மாறும் என்ன உறுதி அளித்து பேசினார் உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப. தன்சிங் பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் ஜெயபிரகாஷ் கீழ்கட்டளை பகுதிக்கழக செயலாளர் சந்திரசேகர் ராஜா மற்றும் கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் உடன் உள்ளனர்

# மானாமதுரை வடக்கு ஒன்றியப் பகுதிகளில் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு



சிவகங்கை ஏப்.20-

சிவகங்கை தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரான . முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது.கருணாஸ் காளையார்கோவில். கல்லல் . சிவகங்கை உள்ளிட்ட பல பகுதிகளில் தனது தேர்தல் பிரச்சாரத்தை முடித்து விட்ட நிலையில் . நேற்றைய தினம் மானாமதுரை வடக்கு ஒன்றியத்தில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்...மானாமதுரை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அ.முத்துச்சாமி தலைமையில் நடைபெற்ற இந்த தேர்தல் பரப்புரை யின் போது ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்தும் குலவையிட்டும் . கிளைக்கழகங்கள் சார்பில் பட்டாசு வெடித்தும். கைத்தறியாடை அணிவித்தும் வேட்பாளர் கருணாஸ்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது... இதனிடையே பெரிய கோட்டை கிளைக் கழக திமுக சார்பில் திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர். மாவட்ட அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி தலைமையில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...ஏஆர். ஜெயமூர்த்தி கருணாஸ் மற்றும் ஒன்றிய செயலாளர் அ.முத்துச்சாமி உள்ளிட்ட அனைவருக்கும் கைத்தறியாடை அணிவித்து வரவேற்று சிறப்பான தொரு வரவேற்பு அளிக்கப் பட்டதுஇதேபோல் . கிளாதரி . தாண்டவன் பட்டி . கல்லூரணி . பச்சேரி. கானூர். வேம்பத்தூர் . வி.புதுக்குளம் . இடைக்காட்டூர் . கள்ளர் காடு .காளிகாடு .செட்டிக்குளம். பாப்பாங்குளம். பதினெட்டான்கோட்டை . விளாக்குளம் உள்ளிட்ட பல பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்...இந்த நிகழ்ச்சியின் போது இடைக்காட்டூர் ஊராட்சி மேனாள் தலைவர். கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ஆ.முசண்முகநாதன் . மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் . தொகுதி வெல்லும் தமிழ்ப் பெண்கள் பொறுப்பாளர் வளர்மதி கலைச்செல்வன் இளைஞரணி வேங்கை பாண்டி . கொன்னக்குளம் மலைச்சாமி. அறங்காவலர் பால்பாண்டி வேங்கை சுந்தர். பெயிண்டிங் காண்ட்ராக்ட்டர் காளீஸ்வரன் . மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் . மார்கரேட் கமலா பத்தினாதன் பாப்பாங்குளம் கருப்புச்சாமி. கிங் கார்த்திக். முப்பையூர் சிவா . வாடி வாசல் முத்துவேல் செல்வம். பத்மாவதி பிரபாகரன். உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்...



# ஆற்காடு பகுதியில் திமுக வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

ராணிப்பேட்டை ஏப்.20-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் ஆற்காடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுமக்களிடையே வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் திமுக நகர செயலாளர் ஏ.வி.சரவணன், மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் பாபுவளவன், நகர செயலாளர் சந்தோஷ்,. தேமுதிக நகர செயலாளர் பிரபு, காங்கிரஸ் ,கம்யூனிஸ்ட் கட்சி முன்னணி பொறுப்பாளர்கள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வந்தவாசி நகரில் வாக்கு சேக ரிக்கசென்ற அதிமுக வேட்பாளர் ராணிக்கு பாமக சார்பில் உற்சாக வரவேற்பு



வந்தவாசி,ஏப்.20-

வந்தவாசி நகரில், இரட்டை இலைக்கு வாக்கு சேகரிக்க சென்ற தேசிய ஜனநாயககூட்டணி அதிமுக வேட்பாளர் ராணிக்கு பாமக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஆரணி சாலை, வெண் குன்றம் சாலை,காட்டு நாயக்கன் தெரு, அண்ணாசாமி முதலி தெரு, கோட்டை பகுதி, காஞ்சிபுரம் சாலை ,கனகராமசாமி பிள்ளை தெரு, துலுக்கானத்தம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் தேசிய ஜனநாயககூட்டணி அதிமுக வேட்பாளர் ராணி தீவிர வாக்கு சேகரிப் பில் ஈடுபட்டார். அதிமுகவின் தேர்தல் அறிக்கை அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்களை பொதுமக்க ளுக்கு வழங்கி இரட்டை இலைக்கு வாக்களிக்குமாறு வாக்கு சேகரிப் பில் ஈடுபட்டார். வாக்கு சேகரிக்க சென்ற அவருக்கு பாமக நகர செயலாளர் வரதன் தலைமையில் அந்த பகுதி மக்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்றனர்இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி யில், சட்டமன்ற தொகுதி பொறுப் பாளர் ஜாகிர் உசேன், மாவட்ட அவைத்தலைவர் டி கே பி மணி,மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார், நகர செயலாளர் ஓட்டல் பாஷா, ஒன்றிய செயலாளர் எம்.கே.ஏ. லோகேஷ்வரன்,அம்மா பேரவை துணைச் செயலாளர் ராஜசேக ரன், இளம்பெண்கள் மற்றும் இளைஞர் பாசறை முன்னாள் ஒன்றிய செயலாளர் ராஜேஷ் குமார், தலைமை பொதுக் குழு உறுப்பினர் லதா குமார்,மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் பந்தல் சேகர், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் வழூர் சக்ரபாணி, எம் ஜி ஆர் இளைஞர் அணி மாவட்ட துணைச் செயலாளர் ராஜேஷ் கண்ணா, ஹைடெக் பாபு, செந்தில்குமார், விஜயன் ,கிறிஸ்டி,மணிவாசன், ஜேசிபி ரமேஷ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம் , நகர அவைத் தலைவர் இளவழகன்,முன்னாள் நகர செயலாளர் ரத்தினம்.அண்ணா தொழிற் சங்க ராஜசேகரன், ரா நந்தம் கணேஷ்,பாமக மாவட்ட அமைப்புச் செயலாளர் சக்திவேல், மாவட்ட தேர்தல் பணிக்குழு தலைவர் என்.எஸ். மணி,கீழ்புத்தூர் தசரதன், சட்டமன்ற தொகுதி பாஜக பொறுப்பாளர் நவநீதி, நகர செயலாளர் சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி குணசேகரன், முன்னாள் மாவட்ட பொதுச் செயலாளர் மோகனரங்கன்,

உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் வாக்குப்பதிவு முந்தைய நாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான கூட்டம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது



நீலகிரி, ஏப்.20-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2026 ஐ முன்னிட்டு, மண்டல அலுவலர்கள் வாக்குப்பதிவு மற்றும் வாக்குப்பதிவு முந்தைய நாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கு உதகை தேர்தல் நடத்தும் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு கூடலூர் தேர்தல் நடத்தும் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலும் நடைபெற்றது. இதில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதியில் பணியாற்றும் 31 மண்டல அலுவலகர்களும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதியில் பணியாற்றும் 26 மண்டல அலுவலகர்களும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் பணியாற்றும் 26 மண்டல அலுவலகர்கள் என மொத்தம் 83 மண்டல அலுவலகர்கள் கலந்து கொண்டனர்.இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள் தெரிவித்ததாவது:

மண்டல அலுவலர்கள் தங்களுக்குண்டான வாக்குச்சாவடிகளை நேரில் ஆய்வு செய்து, அனைத்தும் சரியான முறையில் உள்ளதா என உறுதி செய்ய வேண்டும். மேலும், நாளை மறுநாள் 20.04.2026 அன்று நடைபெறவுள்ள பயிற்சியில், அனைத்து வாக்கச்சாவடி அலுவலகர்ளுக்கு சந்தேகங்கள் ஏற்படாத வகையிலும், வாக்கு பதிவு நாள் அன்று பணிகளை சிறப்பாகமேற்கொள்ளும் வகையிலும், தேவையான பயிற்சிகளை அளிக்கவேண்டும். மாதிரி வாக்கு பதிவுகள் மேற்கொண்ட பின்பு, அதனை தவறாமல் அளிக்க வேண்டும், என்று அவர்களிடையே தொடர்ந்து தெரிவிக்கவேண்டும். தேர்தல் ஆனையம் தெரி வித்துள்ளபடி தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், வாக்குப்பதிவு நாளன்று பதற்றமின்றி பணிகளை சிறப்பாக மேற்கொள்ள எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் தெரிவித்தார். ஆதனைத்தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேர்தலின் போது பயன்படுத்துவதற்காக குன்னூர் ப்ராவிடன்ஸ் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பார்வை யிட்டார்.இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / குன்னூர் சார் ஆட்சியர்

சங்கீதா உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



# ஸ்ரீ ஆறுமுகசாமி சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு அன்னதானம்

ராணிப்பேட்டை ஏப்.20-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த தாஜ்புரா ஸ்ரீ ஆறுமுகசாமி சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு 14 வது மாதமாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அறக்கட்டளையின் கௌரவத் தலைவரும்,தாஜ்புரா முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான ம.சேட்டு கலந்து கொண்டு அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். முன்னதாக ஸ்ரீ ஆறுமுகசாமி சித்தர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து சிறப்பு பூஜை செய்து அன்னதான நிகழ்ச்சி துவங்கப்பட்டது. இதில் செயல் தலைவர்கள் மோகனவேலு, சிவக்குமார்,தலைவர் பா.ஞானசேகரன், செயலாளர் எஸ்.ஆர்.பாஸ்கரன், பொருளாளர் த.நந்தகோபால், துணை தலைவர்கள் ம.ரஜினிகாந்த், ஜே.சரவணன், துணைசெயலாளர் கு.கோகுல்நாத், மு.பச்சையப்பன், அமைப்பாளர் எஸ்.தமிழரசன், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் பா.ராஜா மற்றும் கணபதிநகர் ஆலய அறக்கட்டளை நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். இதில் சுமார் 1000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பழைய பேட்டை மீன் மார்க்கெட் பகுதியில் அதிமுக நகர செயலாளர் கேசவன் தலைமையில் கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.

# தமிழக வெற்றிக் கழகத்தின் சின்னம் மற்றும் பெண் நிர்வாகிகளை இழிவுபடுத்திய நபர் மீது காவல் நிலையத்தில் புகார்




இளையான்குடி ஏப்.20-

தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சிச் சின்னம் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த பெண் நிர்வாகிகளை முகநூலில் (Facebook) அவதூறான முறையில் சித்தரித்து பதிவிட்ட நபர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கக் கோரி சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப் பட்டுள்ளது.சம்பவத்தின் பின்னணி: சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பகுதியைச் சேர்ந்த கவிபாலன் (தமிழக வெற்றிக் கழகத்தின் ஒன்றிய செயலாளர்) என்பவர் இந்த புகாரை அளித்துள்ளார். அந்தப் புகாரில், இளையான்குடி வட்டம், ஆழிமதுரை கிராமத்தைச் சேர்ந்த நாகூர் கனி என்பவரது மகன் சேக் முகமது (என்கிற அபு ஆதில் அப்துல்லா) என்பவர், தனது முகநூல் பக்கத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி மற்றும் சின்னத்தை மிகவும் ஆபாசமாகவும், இழிவுபடுத்தும் வகையிலும் சித்திரமாக வரைந்து பதிவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.புகாரில் கூறப்பட்டுள்ள முக்கியமான தகவல்: நிர்வாகிகள் இழிவு: கட்சி நிர்வாகிகளைத் தற்குறிகள் என விமர்சித்ததோடு, கட்சியின் பெண் நிர்வாகிகளை மிகவும் ஆபாசமான வார்த்தைகளால் கொச்சைப்படுத்தி அந்த நபர் பதிவிட்டுள்ளார்.

அவதூறு பரப்புதல்: திட்டமிட்டே கட்சியின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கிலும், பெண் நிர்வாகிகளின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலும் இந்தப் பதிவுகள் பகிரப்பட்டுள்ளன. காவல் நிலைய முற்றுகை: இது தொடர்பாக இளையான்குடி காவல் நிலையத்தின் முன்பு கட்சியின் நிர்வாகிகள் மற்றும் பெண்கள் பெருமளவில் திரண்டு வந்து, சம்பந்தப்பட்ட நபர் மீது உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வலியுறுத் தினர்.கோரிக்கை:சமூக வலைத்தளங்களில் ஆபாசமான கருத்துக்களைப் பரப்பி, பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட சேக் முகமது (அபு ஆதில் அப்துல்லா) மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தினர் தங்களது புகார் மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.புகார் அளிக்கும்போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பெண் தொண்டர்கள் உடனிருந்தனர். காவல்துறையினர் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## வெலிங்டன் கண்டோன்மென்ட் ஜெயந்திநகர் பகுதியில் அதிமுக வேட்பாளர் சாந்திராமுவுக்கு பொது மக்கள் உற்சாக வரவேற்பு

குன்னூர், ஏப்.20-

குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர், பகுதியில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சாந்திராமு தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அதிமுக வேட்பாளர் சாந்திராமு செல்லும் இடமெல்லாம், பொது மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மிகவும் சிறப்பாக பணியாற்றி கொரனோ காலத்தில் பொது மக்களுக்கு தொடர்ந்து உதவிகள் செய்தும், தொடர்ந்து பொது மக்களும் மருத்துவ சிகிச்சை உதவிகள் செய்தும் மக்களின் மனதில் என்றென்றும் நீங்காத இடம் பிடித்தவர் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அதிமுக. வேட்பாளர் சாந்திராமு. உடன் வெலிங்டன் நகரிய கழக செயலாளர் துரைராஜ், வெலிங்டன் அம்மா பேரவை நகரிய செயலாளர் சிவக்குமார், பாஜக மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரி.ரமேஷ், பாஜக வெலிங்டன் கண்டோண்மென்ட் 2வது வார்டு கிளை செயலாளர் சகாதேவன், அதிமுக உறுப்பினர்கள், மற்றும் தேசிய கூட்டணிகட்சி உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 127பழனி, 128ஒட்டன்சத்திரம் மற்றும் 129ஆத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் தினேஷ் ஜெயின், மற்றும் 132திண்டுக்கல், 133வேடசந்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் பி.சி.சதீஷா, ஆகியோர்களின் தலைமையில் தேர்தல் பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அருகில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பாத்திமா சகாயராஜ் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ஜி.பஞ்சாப் கேசன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

## திமுக மகளிர் மற்றும் தமிழ்நாட்டிற்கு எதிரான கட்சி : பியூஸ் கோயல்

நீலகிரி, ஏப்.20-

நீலகிரி மாவட்டம் உதகை சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் எம் போஜராஜனை ஆதரித்து பாஜக மூத்த தலைவர் மற்றும் மத்திய அமைச்சர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். உதகையில் மாவட்ட பிரதிநிதிகள் மோகன்ராஜ், ராஜேஸ் சந்தர், முருகானந்தம், பரமேஸ்வரன் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் பின்னர். பல்வேறு அமைப்பு நிர்வாகிகளை சந்தித்து அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிரிடம் கூறியதாவது:மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவிற்கு எதிராக திமுக எடுத்த நிலைப்பாடு அக்கட்சி மகளிருக்கு எதிரானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. மகளிருக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கக் கூடாது என்பதில் திமுக உறுதியாக உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மகளிருக்கு கூடுதல் அங்கீகாரம் அளிக்க முடியும்..அதை மறைத்து விட்டு தவறான தகவல்களை மு க ஸ்டாலின் பரப்பி வருகிறார். உண்மையை மறைத்து தொடர்ந்து பொய் பேசி வருகிறார். நாட்டை வடக்கு மற்றும் தெற்கு என்ற பிரித்து சூழ்ச்சியுடன் செயல்படுகிறார். இந்தியா என்பது ஒரே நாடாகும்



அனைவரும் ஒருமித்து வாழ்வதன் மூலம் நாட்டின் வளர்ச்சியை மேற்கொண்டு எடுத்துச் செல்ல முடியும். தொகுதி மறுவரையின் மூலம் தற்போதுள்ள மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும். தற்போது உள்ள எண்ணிக்கையில் 50 சதவீதம் உயர்த்தப்படும். இதன்மூலம் தமிழகத்தின் தற்போதுள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை 59 ஆக உயரும். நாட்டில் கூடுதலாக 540 தொகுதிகள் உருவாக்கப்படும். இதன் மூலம் அதிக அளவு பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க முடியும் 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில் பெண்களுக்கு கூடுதல் அதிகார பகிர்வும், உரிய அங்கீகாரமும் அளிக்க முடியும். இதை கருத்தில் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.. இதற்கு திமுக உள்ளிட்ட இண்டி கூட்டணி கட்சிகள் எதிராக உள்ளன. திமுக கட்சி தமிழகத்திற்கும் மகளிருக்கும் எதிரானது என நிரூபித்துள்ளது. முதல்வர் ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி, மறுமகன் சபரீசன், சகோதரி கனிமொழி என குடும்ப அரசியல் நடத்தி ஊழலில் சிக்கியுள்ள தமிழ்நாட்டை காப்பாற்ற மக்கள் தயாராகிவிட்டனர். அதிமுக பாஜக அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணியை பெரும்பாலான மக்கள் ஆதரிக்க தொடங்கிவிட்டனர் தமிழகத்தில் மணல் கொள்ளை, டாஸ்மாக் ஊழல், நில அபகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் திமுகவினர் மாபியாக்கள் போல் சுதந்திரமாக செயல்பட்டு வருகின்றனர். வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து மக்கள் போதைக்கு அடிமையாக்கிவிட்டனர். மாநில நிதி நிலை அறிக்கையில் வேளாண் துறைக்கு குறிப்பிடப்படும் அளவிற்கு ஒன்றும் இடம் பெறவில்லை. தொடர்ந்து பொய்யை மட்டும் ஸ்டாலின் பேசி வருகிறார். மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் இரட்டை குடியுரிமை தொடர்பாக அலகாபாத் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து பதிலளித்த அமைச்சர் நீதிமன்றம் உரிய தீர்ப்பை அளிக்கும் என்றார். நீலகிரி மாவட்டம் அனைத்து துறைகளிலும் பின்தங்கியுள்ளது. இதற்கு திமுக அரசின் மோசமான செயல்பாடுதான் காரணம் என்றார்.

## மானாமதுரை தொகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் இளங்கோ தீவிர வாக்கு சேகரிப்பு: உற்சாக வரவேற்பு அளித்த பொதுமக்கள்

மானாமதுரை ஏப்.20-

தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிடும் துரை. இளங்கோ, தனது தேர்தல் பிரச்சாரத்தை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகிறார். பல்வேறு கிராமங்களில் எழுச்சிமிகு பயணம்கடந்த (18.04.2026) தேதி மானாமதுரை மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் இளங்கோ தனது சூறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். காலை 07.00 மணிக்கு முத்தனேந்தல் பகுதியில் தொடங்கிய இந்தப் பிரச்சாரப் பயணம், துத்திகுளம், முனியாண்டிபுரம், கிருஷ்ணாபுரம், மேலப்பசலை, கீழமேல்குடி, கட்டிக்குளம், முல்லைக்குளம் உள்ளிட்ட





பல்வேறு பகுதிகளின் வழியாகச் சென்று இரவு பெரும்பச்சேரி பகுதியில் நிறைவடைந்தது. மேலப்பசலை மற்றும் கீழமேல்குடியில் உற்சாக வரவேற்பு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலப்பசலை கிராமத்திற்கு வேட்பாளர் இளங்கோ வருகை தந்தபோது, அவருக்கு மேலப்பசலை கிளைச் செயலாளர் ஜெய்சங்கர் தலைமையில் பொன்னாடை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தார். அதேபோல், கீழமேல்குடி கிராமத்திலும் பொதுமக்கள் மத்தியில் இளங்கோ வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். ஒவ்வொரு கிராமத்திலும் அவருக்குப் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். குறிப்பாக பெண்கள் ஆரத்தி எடுத்து, தாரை தப்பட்டை முழங்க அவரை வரவேற்றது தொண்டர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் ஆதரவு கோருதல் வாக்கு சேகரிப்பின் போது பொதுமக்கள் மத்தியில் பேசிய வேட்பாளர் இளங்கோ: கட்சியின் கொள்கைகள் மற்றும் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய வாக்குறுதிகளை விளக்கிக் கூறினார். தொகுதியின் வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து உறுதி அளித்தார். தமிழக வெற்றிக் கழகத்தின் "விசில்" சின்னத்திற்கு வாக்களித்து பெரும் வெற்றியை ஈட்டித் தருமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.நிர்வாகிகள் பங்கேற்பு இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வுகளில் மானாமதுரை மேற்கு ஒன்றியத் தலைவர் சரண் ராஜ் , நிர்வாகி முத்துராமன் மேலப்பசளை கிளைச் செயலாளர் ஜெய சங்கர் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், தொண்டர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு இளங்கோவிற்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.





■ கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்கு வருகை புரிந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியின் தேர்தல் மேற்பார்வையாளர், கர்நாடக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கிருஷ்ணகிரி தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமாரை ஆதரித்து காவேரிப்பட்டினத்தில் "கை" சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்



■ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் வடக்கு ஒன்றியம், மாதேப்பள்ளி ஊராட்சியில் கிறிஸ்துவ தேவாலயத்தில், பர்கூர் பகுதியில் திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் வடக்கு ஒன்றியம், மாதேப்பள்ளி ஊராட்சியில் கிறிஸ்துவ தேவாலயத்தில், பர்கூர் பகுதியில் திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பட்டிணம் மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி தலைமையில் அதிமுக(ஸிறிஷி) அணி மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் ஷி.நி.வெற்றிவேல், ஒன்றிய மாணவர் அணி பிரகாஷ் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் தொகுதி திமுக வேட்பாளருமான மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

## காளையார்கோவில் தெற்கு பெரியகண்ணனூரில் மாட்டுவண்டி ஓட்டி வாக்கு சேகரிப்பு.வேட்பாளர் கருணாஸ் க்கு அமோக வரவேற்பு

காளையார் கோவில் ஏப்.20-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர். முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது.கருணாஸ் கிட்டத்தட்ட தொகுதி முழுவதும் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்...

காளையார்கோவில் தெற்கு ஒன்றியப் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் கருணாஸ் நேற்றைய தினம் பெரியகண்ணனூரில் மாட்டு வண்டியில் வேட்பாளர் கருணாஸ் வண்டியை ஓட்டிச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்...

காளையார்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த தேர்தல் பரப்புரையில்



பெரியகண்ணனூர் கிளை திமுக நிர்வாகிகளான ராதாச்செல்வம் . இளங்கோ . தனிஷ்லாஸ் . நாட்டுச்சாமி . துரைராஜ் . அருணகிரி . பாலு . ரமேஷ் ஆகியோரது ஏற்பாட்டில் மாட்டு வண்டியில் ஏறி வண்டியை சிறிது தூரம் ஓட்டிச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்... இந்த நிகழ்ச்சியின் போது . காளையார்கோவில் ஒன்றிய துணைச் செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி. வழக்கறிஞர் தேவகோட்டை வி.எம்.ஆசைத்தம்பி . அவைத் தலைவர் வரதராஜன் . மாவட்ட பிரதிநிதி தோக்கப்பன் . ஒன்றிய பொருளாளர். ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு முன்னாள் தலைவர் . வழக்கறிஞர் வெட்டிவயல் வெங்கடேஷ் விளையாட்டு மேம்பாட்டு அணி நவநீதக்கிருஷ்ணன். திருநாவுக்கரசு. இளையராஜா. பாண்டியராஜன் . மாரிமுத்து. அழகுராஜா . பாண்டிச்செல்வம் . தங்கவேலு. அய்யனார் .லதா. நதியா. சித்திரைச்சாமி. கணேசன். காங்கிரஸ் பூமி. உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதனிடையே முடிக்கரை கல்லத்தி மறவமங்கலம் கூட்டுறவு சங்க மேனாள் தலைவரும் .முடிக்கரை ஒன்றிய முன்னாள் கவுன்சிலருமான . ஓபிஎஸ் அணி ஒன்றிய செயலாளர் . எம்.எஸ்.மனோகரன் தலைமையில் இருநூறுக்கும் மேற்பட்டோருடன் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

பட்டாசு வெடித்தும் பெண்கள் ஆரத்தி எடுத்து குலவையிட்டும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது...

பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி . ஒன்றிய செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையிலும் வேட்பாளர் கருணாஸின் முன்னிலையிலும் தங்களை திமுக வில் இணைத்துக் கொண்டனர்...



# அரசு பள்ளி மாணவர்களுக்குகற்றல் கற்பித்தலுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது

காளையார் கோவில் ஏப்.20-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கற்றல் கற்பித்தலுக்கான 2026 2027ஆம் ஆண்டிற்கான கல்வி உபகரணப் பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். ஜப்பான் நாட்டிலுள்ள NITCO டெக்னாலஜி நிறுவனத்தின் நிறுவுனர் பிரபு அந்நிறுவனத்தின்




மேலாளர் அனுசியா சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு வடிவியல் பெட்டிகள் நோட்டுகள் வாய்ப்பாடுகள் சிலேட்டுகள் ஓவிய நோட்டுகள் மற்றும் கிட்ஸ் என ₹25000 மதிப்புள்ள பொருட்களை வழங்கி மகிழ்ந்தனர். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துகில் அணிவித்து புத்தகங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. பெற்றோர் ஆசிரியர் கழக தலைவி வசந்தமலர் தொழிலதிபர் கல்யாண சுந்தரம் ஆசிரியை கமலம்பாய் வாழ்த்துரை வழங்கினர். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா கஸ்தூரி பெற்றோர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். இதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி சிறப்பாக ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்திருந்தார்.


# பாதுகாப்பு விழிப்புணர்வு செய்தி: ஒரு நிமிடம் நிதானியுங்கள்

கன்னியாகுமரி, ஏப்.20-

நமது வாழ்க்கையில் ஒவ்வொன்றிற்கும் பல ஆண்டுகள் காத்திருக்கிறோம்; பிறக்க 9 மாதங்கள், நடக்க 2 ஆண்டுகள், வாக்களிக்க 18 ஆண்டுகள், வேலைக்கு 25 ஆண்டுகள் என காத்திருப்புகளே நம் வாழ்வை அழகாக்குகின்றன. ஆனால், சாலையில் வாகனத்தை முந்திச் செல்ல மட்டும் ஏன் 30 வினாடிகள் கூட காத்திருக்க மறுக்கிறோம்?குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் அன்பான வேண்டுகோள்: அவசரம் விபத்தாகும்:ஒரு நொடி கவனக்குறைவு உங்களை மாதக்கணக்கில் அல்லது



ஆண்டுகணக்கில் மருத்துவமனையில் முடக்கிவிடக்கூடும். விதிமுறை காப்போம்: போக்குவரத்து விதிகளை மதித்து, சரியான திசையிலும், மிதமான வேகத்திலும் வாகனங்களை ஓட்டுங்கள். கவசம் உயிர் காக்கும்: இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கட்டாயம் தலைக்கவசம் அணியுங்கள். வாகனத்தை எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். காத்திருக்கும் உறவுகள்: உங்கள் வருகைக்காக உங்கள் குழந்தைகளும் குடும்பத்தினரும் இல்லத்தில் காத்திருக்கிறார்கள் என்பதை ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள்.முன்னால் செல்பவர்கள் செல்லட்டும், பின்னால் வருபவர்கள் வசதியாக வரட்டும். உங்கள் இலக்கை நீங்கள் பாதுகாப்பாக அடையுங்கள்.கவனமாக இருங்கள்... இனிய பயணம் அமையட்டும்!ஷி ஸ்டாலின், காவல் கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்டம்.



# பேரூராட்சி துணைத்தலைவர் விப்ரநாராயணன் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்

மாதவரம், ஏப்.20-

வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் திமுக வேட்பாளருமான சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மூன்றாவது முறை வேட்பாளராக போட்டியிடும் மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியின் துணைத்தலைவர் ஆர்.இ.ஆர். விப்ரநாராயணன் தலைமை ஏற்று நாரவாரிகுப்பம் பேரூராட்சி 11வது வார்டுக்கு உட்பட்ட 313, 314, 316 பாகத்தில் அடங்கிய திருவள்ளூர் தெரு, சுப்பிரமணி பாரதியார் தெரு மற்றும் அம்பேத்கர் தெருவில் உள்ள வாக்காளர்களிடம் சுமார் 50க்கும் மேற்பட்ட திமுக தொடர்களுடன் வீடு வீடாக சென்று 5 ஆண்டில் திமுக செய்துள்ள மக்கள் பணி மற்றும் பல்வேறு சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் 11வது வார்டு அவைத்தலைவர் இசைவாணன், இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ஆர்.வி.கிருஷ்ணகுமார், பொருலாளர் வேலு, மீனவரணி துணை அமைப்பாளர் தினகரன் மற்றும் காசிமுருகன், கோட்டீஸ்வரன், ஜாபர், அகமதுபாட்ஷா, ஜாபர்சாதிக், மோகன்கௌரி, ரகமத், சபாஸ்டீன், ராமன், அசரபலி உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.

# தேசிய அறிவியல் தின கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழா நடைபெற்றது

கல்லல் ஏப்.20-

சிவகங்கை மாவட்ட அளவிலான தேசிய அறிவியல் தின கட்டுரைப் போட்டி தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக நடத்தப்பட்டது. 40 மாணவ மாணவிகளும் 10 ஆசிரியர்களும் இப்போட்டியில் கலந்து கொண்டனர். கல்லல் கிளை நூலகத்தில் நடைபெற்ற விழாவில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நெற்புகப்பட்டி ராம்ராக் பாசறை நிறுவனர் சந்திரமோகன் சார்பில் பரிசாக புத்தகமும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கானப் பிரிவில் முதல் பரிசை காளையார் கோவில் புனித மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி



பேராசிரியர் கற்பகமும், இரண்டாம் பரிசை சுண்ணாம்பிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியை இசபெல்லா இளவரசியும், மூன்றாம் பரிசை காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை மகாலெட்சுமியும், சிறப்புப் பரிசை காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆசிரியை சோலைமணி சுகந்தியும் பெற்றனர். ஆசிரியர்கள் கண்ணன் கவிதா அனிதா ரோஸ்லின் தென்றல் வினோஷா ஆகியோருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்கான பிரிவில் மகேஸ்வரி, ஆர்த்தி, ரஜிசெல்லா முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசைப் பெற்றனர். மதுமிதா ராகினி ஷாய் சோபியா கீர்த்திகா சினேகா பிரியதர்ஷினி வினிதா பிளஸ்வின் மஹிபா விஜயலட்சுமி ஆகியோர் ஆறுதல் பரிசு பெற்றனர். உயர்நிலை மாணவர்கள் பிரிவில் காரைக்குடி மகரிஷி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஜெனோலின் முதல் பரிசும், தேவகோட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவி ஹேசிகா இரண்டாம் பரிசும் பெற்றனர். மாணவர் அருள் ஸ்ரீநிதி தர்வின் நஜ்லா ரஹ்மத் ஆறுதல் பரிசு பெற்றனர். இளநிலைப் பிரிவில் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் பள்ளி மாணவிகள் மேக்னாவுக்கு முதல் பரிசு, சாய்ஸ்னாவுக்கு இரண்டாம் பரிசு, சுண்ணாம்பிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அனுஷ்காவுக்கு மாணவி மூன்றாம் பரிசு, காரைக்குடி இராமநாதன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி மாணவி ஐஸ்வர்யாவுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. கார்த்திக் யாழிசை யாழ் நிலா லாவண்யா வருண் கிருஷ்ணன் நரேன் ரிதன்யா பிரனிதா காருண்யா கற்பகம் சபரீஷ் கார்த்தி ஸ்ரீவர்மா ஆகியோர் ஆறுதல் பரிசு பெற்றனர். கிளை நூலகர் நாகராஜன், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கிளை ஆரோக்கியசாமி பிரபு சாஸ்தா சுந்தரம் தனுசு ஸ்டாலின் விநாயகமூர்த்தி சக்திவேல் நாகரத்தினம் மருதநாயகம், நூலக உதவியாளர் அழகுமீனாள் உள்ளிட்டோரும் பள்ளி மாணவ மாணவிகள் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை(19.04.2026 ஞாயிற்று கிழமை) மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சிவகங்கை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் திரைப்பட நடிகர் சேதுகருணாஸ் அவர்களுக்கு நகர் மன்ற தலைவர் மற்றும் நகர் கழக செயலாளர் சி.வி.துரைஆனந்த் அவர்கள் தலைமையில் மதுரை ரோடு சர்ச்சில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கபட்டது. இந்நிகழ்வில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள், பிரதிநிதிகள், அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...



■ தமிழக காவல்துறையில் முக்கிய மாற்றமாக, உளவுத்துறை ஐஜியாக பணியாற்றி வந்த செந்தில்வேலன் மாற்றப்பட்டு, புதிய ஐஜியாக அவினாஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.தேர்தல் நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் நேரடி உத்தரவின் பேரில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.தமிழகத்தில் தேர்தல் சூழல் தீவிரமடைந்துள்ள நிலையில், உளவுத்துறையின் உயர்மட்ட மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. புதிய ஐஜி அவினாஷ் குமார் விரைவில் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.




■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி உப்புக்கோட்டை ஆதிபட்டி ஆகிய பகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் நாராயணசாமி அவர்களை ஆதரித்து தமிழின வேந்தர் ஜான் பாண்டியன் அவர்கள் இன்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்....இந்த வாக்கு சேகரிப்பின் நிகழ்ச்சியான இன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பார்த்திபன் , சற்குணம், மாவட்டத் தலைவர் ராஜா, , எஸ் பி .தில் பிரசாந்த் மாவட்ட கழக செயலாளர் , வழக்கறிஞர் பிரிவு குமார்,பிரகாஷ்குமார், பிரகாஷ் பாண்டியன் ஆகியோர்கள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்..

# அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியின் 76வது ஆண்டு விழா கோலாகலம்: துணைவேந்தர் க. ரவி தலைமையுரை

காரைக்குடி ஏப்.20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியின் 76வது ஆண்டு விழா கல்லூரியின் கருத்தரங்கக் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் மதிப்புறு கர்னல் பேராசிரியர் க. ரவி தலைமை வகித்தார்.நிகழ்ச்சித் தொடக்கம் மற்றும் ஆண்டறிக்கைவிழாவின் தொடக்கமாக, கல்லூரியின் இணைப் பேராசிரியரும் முதல்வருமான முனைவர் ஜே.இ. மெர்லின் சசிகலா வரவேற்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, உதவிப் பேராசிரியை முனைவர் ஜே. ஜெயசித்ரா, கல்லூரியின் கடந்த




காலச் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்த ஆண்டறிக்கையை வாசித்தார். துணைவேந்தர் ஆற்றிய தலைமை உரைநிகழ்ச்சியில் ஆண்டு விழா மலரை வெளியிட்டுப் பேசிய துணைவேந்தர் க. ரவி:"மாணவிகள் மன உறுதியோடு செயல்பட்டால் வருங்கால சவால்களை எளிதாக எதிர்கொண்டு, சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிட முடியும்."என்று மாணவர்களுக்கு ஊக்கமளித்து உரையாற்றினார். வாழ்த்துரைகள் மற்றும் பரிசளிப்பு கல்வியியல் புலத்தின் முதன்மையர் பேராசிரியர் க. கலையரசன் மற்றும் முன்னாள் முதல்வர் முனைவர் சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும், தன்னார் வலர்களுக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும் துணைவேந்தர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் புத்தகம் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினர்.கலை நிகழ்ச்சிகள் மற்றும் பங்கேற்பாளர்கள் பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து, கல்லூரியின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் கண்கவர் வகையில் நடைபெற்றன. நிறைவாக, உதவிப் பேராசிரியை முனைவர் ம. சண்முக ரேவதி நன்றியுரை ஆற்றினார்.இவ்விழாவில் கல்வியியல் புலப் பேராசிரியர்கள், முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், காரைக்குடி லயன்ஸ் கிளப் நிர்வாகிகள், அலுவலகப் பணியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் திரளான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161